1983 பிப்ரவரி 1]

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகள் கட்டணத்தை உயர்த்தும் திட்டம்.

*வினா எண் 95 — திரு. எஸ். ஆண்டித்தேவர், திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்து பேருந்துகளில் பயணிகள் கட்டணத்தை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) மற்ற மாநிலங்களுக்கும் நமது மாநிலத்திற்கும கட்டண விகிதங்களில் உள்ள வித்தியாசம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)&(ஆ) விவர அறிக்கை ஒன்று ** அவைமுன் வைக்கப்படுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, வினா பிரிவு (ஆ)வில் மற்ற மாநிலங்களுக்கும் நமது மாநிலத்திற்கும் கட்டண விகிதங்களிலுள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே அண்டை மாநிலங்களாக இருக்கிற 3 மாநிலங்களின் விவரங்களை மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அண்டை மாநிலங்கள் என்றால் இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களும் அடங்கும். மேற்கு வங்காளத்தில் இதே விவரங்களை நான் கேட்டபோது எல்லா மாநிலங்களுக்குமான விவரங்களை ஒரு நாளைக்குள்ளாகவே திரட்டி, தயாரித்துக் கொடுத்தார்கள் அவர்களால் கொடுக்க முடியும் என்றால் உங்களால் மட்டும் கொடுக்க முடியாதா?

அப்படி அவர்கள் கொடுத்த விவரப்படி அங்கே 7 கிலோ மீட்டர் வரையிலும் 30 பைசா என்றிருக்கிறது, ஆனால், தமிழகத்தில் 50 பைசா, இப்படி மற்ற மாநிலங்களை கம்ப்பேர் பண்ணும்போது நம்முடைய மாநிலத்தில் அதிகமாகவே இருக்கிறது. ஒருவேளை அதற்காகத்தான் எல்லா விவரங்களையும் கொடுக்கவில்லையோ என்னவோ? பொதுவாகவே நம்முடைய கட்டண வீதம் அதிகமாக இருக்கும் நிலையில், இன்னும் உயர்த்த வேண்டியதற்கு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்கள் என்னும்போது, வழக்கமாக 2,3 மாநிலங்களைத்தான் ஒப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். காரணம் அந்த மாநில வண்டிகள் இங்கே வருகின்றன, இங்கேயிருந்து அங்கே போகின்றன. அந்த அடிப்படையில்தான் ஒப்பிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் விவரங்களை பார்க்கமாட்டார்கள் என்று நினைக்க முடியாது. அவர்களுக்கு தேவையென்றால்

**122-123 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது

மற்ற விவரங்களை தரத் தயாராக இருக்கிறோம். தவிரவும், அரசு பரிசீலனை செய்கிறது என்று சொன்னால், உயர்த்தித்தான் ஆகவேண்டும் என்பது அல்ல, எப்படி வேண்டுமானாலும் முடிவு எடுக்கலாம். உயர்த்தாமலும் இருக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை நான் கேட்கிறேன். (குறுக்கீடு) கேள்வி கேட்கவில்லை கேட்டால் மற்ற மாநிலங்களுக்கும் கொடுக்கமுடியும் என்று சொல்லுகிறார்களே; ஏற்கெனவே கேள்வியில் கேட்கப் பட்டிருக்கிறதே. பதிலளிக்கும்போது முழு விவரங்களையும் கொடுக்கவேண்டியதுதானே.

Why should the House be deprived of it? Why should the House wait for it?

மற்ற மாநிலங்களாலே அந்த விவரங்களைத் தர முடிகிறபோது உங்களால் தர முடியாதா? மூலக்கேள்வியிலேயே கேட்கப்பட்டிருக்கிறபோது, எல்லா விவரங்களையும் தரவேண்டியதுதானே.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்கள் என்று சொல்கிறபோது, சாதாரணமாக 4,5 மாநிலங்களைத்தான் ஒப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்கள் எல்லாம் என்றும் இதிலே குறிப்பிட்டுச் சொல்லப் படவில்லை என்பதையும் எடுத்துக்கொள்ளலாம். மற்ற மாநிலங்களுக்கும் தேவை என்று கேட்டால் தருகிறோம். இதைப்போய் பெரிய தவறாகக் கருதி எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா மாநிலங்களின் விவரங்களையும் வேண்டுமானால் கொடுக்கலாம். அதைக் கொடுப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. எனவே இனிமேல் அவ்வாறு வருகின்ற போது அப்படிக் கொடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டண உயர்வுப் பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இப்போதுள்ள கட்டணத்தையே ஏழை எளிய மக்கள் கொடுப்பதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே மேலும் உயர்த்துவது நல்லதல்ல. சமீபத்திலேதான் 50 சதவீதம் உயர்வு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே மேலும் கட்டணத்தை உயர்த்தாமல் நிர்வாகத்தைத் திறமையாகவும்

சீராகவும் மெயின்டேய்ன் பண்ணுவதன் மூலம் ஓர்க்ஷாப்பிலே வேலை செய்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி பேருந்துகளைச் சீர்படுத்தி நல்ல முறையிலே இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இருக்கின்ற பல்வேறு நிலைமைகளை விளக்கி ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறார்கள். அதன்மீது முடிவு எடுக்கவேண்டியது அரசினுடைய கடமை. எனவே அதுபற்றி பரிசீலனையில் இருக்கின்றபோது உடனே அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. நிர்வாகத்தை இன்னும் சீர்படுத்தவேண்டும் என்பதில் எங்களுக்கு மிகுந்த ஆர்வம் இருக்கின்றது. இன்று மற்ற இடங்களை விட நிர்வாகம் நல்ல முறையில் இங்கே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

பொள்ளாச்சியில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 96—திரு. எம். பி. இரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டு (டாகாமீட்டர்) கருவியைத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)&(ஆ) பொள்ளாச்சியில் உள்ள சேரன் பொறியியல் கழகத்தின் தொழிற்கூடத்திலேயே வேகக் கட்டுப்பாட்டுக் கருவி தயாரிக்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட முதலீடு ஏதாவது இருக்கின்றதா? வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பொறுத்தவரையிலே ஆண்டு உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்ளே, இதற்கென்று போக்குவரத்துக் கழகங்களிளே பொறுப்பு ஏற்கின்ற காரணத்தால் தனியாக அரசு பணம் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. மேலும் ஆண்டுக்கு எவ்வளவு உற்பத்தி என்று கணக்கிடப்படுவதில்லை. எவ்வளவு தேவை என்று ஆர்டர்கள் கொடுக்கிறார்களோ அதற்கேற்ப உற்பத்தியினை அவர்கள் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.